# நெய்தல் திணையில் கட்டமைக்கப்பட்டுள்ள விளையாட்டுகள்

**சு.முத்துசிதம்பரபாரதி**

*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-058

Subject: Tamil

Received : 30.08.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan058

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-
ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*மக்களின் வாழ்க்கைக் கூறுகளுள் ஒன்றாக விளையாட்டுத் திகழ்கின்றது. மனிதன் தன் உடல்நிலை, மனநிலை ஆகிய இரண்டினையும் சீராக வைத்துக் கொள்ள விளையாட்டுக்கள் பயன்படுகின்றன. சிறுவர் முதல் முதியவர் வரை அனைத்து மக்களும் விளையாடும் வகையில் விளையாட்டுக்கள் உள்ளன. விளையாட்டு ஆரோக்கியமான எலும்புகள் மற்றும் தசைகளை உருவாக்குகிறது. உடற்திறனை அதிகரிக்கிறது. தூக்கத்தை மேம்படுத்துகிறது. தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது. உடல்பருமனாகும் அபாயத்தைக் குறைக்கிறது. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. உடலில் இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. புத்துணர்ச்சி கிடைக்கின்றது. தலைமைப்பண்பு வளர்கிறது. உடலினை உறுதிசெய்கின்றது. இவ்வாறு பல்வேறு நன்மைகள் விளையாடுவதினால் கிடைக்கின்றது. நெய்தல் நில மக்கள் திணை சார்ந்தும் பொழுதுபோக்கிற்காகவும் பல்வேறு விளையாட்டுக்களை விளையாடியுள்ளனர் என்பதனை சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. சங்க இலக்கிய நெய்தல் திணையில் மறைத்தாடல், தாயம், அலவன் ஆட்டம், சிற்றில் இழைத்தல், சிற்றில் சிதைத்தல், வண்டற்பாவை, நீராடல், ஓரையாடுதல், கானலாடல், எண்ணிவிளையாடல், ஊசல் ஆடல், ஆகிய விளையாட்டுகள் பயின்று வந்துள்ளமையை அறியமுடிகின்றது. நெய்தல் நில மக்கள் அஃறிணை உயிரினையும் தன் உடன் பிறந்ததாகக் கொள்ளும் உயரிய குணம் படைத்தவர்கள் என்பதனை அறியமுடிகின்றது. நெய்தல் நில மக்களிடம் 'தாயம்' என்னும் விளையாட்டினை விளையாடும் வழக்கம் இருந்ததனையும் தாயம் என்பதற்கு 'ஆயம்' என்ற பெயர் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது. நெய்தல் நில மக்களின் விளையாட்டுகளில் முதன்மை இடத்தை அவலன் ஆட்டல் என்னும் விளையாட்டு பிடித்துள்ளதையும் இவ்விளையாட்டை பெரும்பாலும் பெண்கள் விளையாடியுள்ளனர் என்பதும் புலனாகின்றது. சிற்றில் இழைத்தல் என்னும் சிறுவீடு கட்டி விளையாடும் விளையாட்டு நெய்தல் நில மக்களிடம் காணப்பட்டதனையும் இன்று குழந்தைகள் வினையாடும் விளையாட்டாக இருக்கும் இவ்விளையாட்டு சங்க காலத்தில் இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டாக இருந்தனையும் உணரமுடிகின்றது. நெய்தல் நில மகளிர் மண்ணால் செய்யப்பட்ட பாவையை வைத்து விளையாடியுள்ளனர் என்பதனையும் அப்பாவையைத் தன் குழந்தை போல பாவித்து பாதுகாக்கின்றனர் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.*

**திறவுச் சொற்கள்** : *அலவன், சிற்றில், வண்டற்பாவை, ஓரையாடுதல், கானல்*

மக்களின் வாழ்க்கைக் கூறுகளுள் ஒன்றாக விளையாட்டுத் திகழ்கின்றது. மனிதன் தன் உடல்நிலை, மனநிலை ஆகிய இரண்டினையும் சீராக வைத்துக் கொள்ள விளையாட்டுக்கள் பயன்படுகின்றன. சிறுவர் முதல் முதியவர் வரை அனைத்து மக்களும் விளையாடும் வகையில் விளையாட்டுக்கள் உள்ளன. விளையாட்டு ஆரோக்கியமான எலும்புகள் மற்றும் தசைகளை உருவாக்குகிறது. உடற்திறனை அதிகரிக்கிறது. தூக்கத்தை மேம்படுத்துகிறது. தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது. உடல்பருமனாகும் அபாயத்தைக் குறைக்கிறது. மன அழுத்தத்தைக் குறைக்கிறது. உடலில் இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. புத்துணர்ச்சி கிடைக்கின்றது. தலைமைப்பண்பு

வளர்கிறது. உடலினை உறுதிசெய்கின்றது. இவ்வாறு பல்வேறு நன்மைகள் விளையாடுவதினால் கிடைக்கின்றது. நெய்தல் நில மக்கள் திணை சார்ந்தும் பொழுதுபோக்கிற்காகவும் பல்வேறு விளையாட்டுக்களை விளையாடியுள்ளனர் என்பதனை சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது.

**மறைத்தாடல்**

மறைத்தாடல் என்னும் இவ்விளையாட்டு இன்று கிச்சு கிச்சு தாம்பாளம், திரித்திரி பம்பக்கா, திரித்திரி பொம்மாலே ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இது இருபாலரும் விளையாடும் விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டிற்கு வயது வரம்பு கிடையாது இரண்டு பேர் மட்டுமே விளையாட முடியும். அதிகமாக மணல் உள்ள இடங்களில் இவ்விளையாட்டினை விளையாடுகின்றனர். தங்களுக்கு இடையில் உள்ள மணலை நீளமாகக் குவித்துக் கொள்கின்றனர். முதலில் ஒருவர் சிறிய கல், செத்தை, ஏதேனும் விதை, சிறிய குச்சி அல்லது சிறிய துணி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை எடுத்துக் கொண்டு அதனை ஆள்காட்டி விரல் மற்றும் கட்டைவிரல் நுனிகளில் பிடித்துக் கொண்டு குவிக்கப்பட்ட மணலில் நுழைத்துக் கையை முன்னும் பின்னுமாகக் கொண்டு சென்று அப்பொருளை மணலில் மறைத்துவிடுகிறார். அவ்வாறு மறைக்கின்ற பொழுது

**“திரித்திரி பொம்மாலே**
**தில்லாலங்கடி பொம்மாலே**
**காசு கண்டேன் பொம்மாலே**
**கடையிலே போட்டேன் பொம்மாலே**
**மூசிக்கோ! பொத்திக்கோ”1**

என்ற பாடலைப் பாடுகிறார். பொருளை மறைத்ததும் எதிரேயிருப்பவர் தன் இருகைவிரல்களையும் கோர்த்துக்கொண்டு அக்கைகளை மணலின் ஓரிடத்தில் வைக்கிறார். அவருடைய கைகளுக்குள் மறைக்கப்பட்ட பொருள் இருந்தால் அவர் வென்றவராகிறார். சங்க காலத்தில் நெய்தல் நிலத்தைச் சார்ந்த சிறுமிகள் மணலைக் குவித்து அதனுள் புன்னை மரத்தின் விதையினை மறைத்து வைத்துப் பின்பு அவ்விதையினைக் கண்டுபிடிக்கும் வகையில் விளையாடினர் என்பதனை,

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய”**

**(நற்.172:1-2)**

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இப்பாடலில் இடம்பெறும்

**“நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே”**

**(நற்.172:4,5)**

என்னும் பாடலடிகளின் வழி நெய்தல் நில மக்கள் அஃறிணை உயிரினையும் தன் உடன் பிறந்ததாகக் கொள்ளும் உயரிய குணம் படைத்தவர்கள் என்பதனை அறியமுடிகின்றது.

**தாயம்**

தாயம் என்னும் விளையாட்டு பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை இந்தியாவில் பரவலாக ஆடப்படும் ஒரு விளையாட்டாகும். இருவர் முதல் நால்வர் வரை தரையிலோ மேடை மீது வைத்தோ விளையாடுவர். இவ்விளையாட்டிற்குச் சூதாட்டம், சொக்கட்டான், சோழிவிளையாட்டு உள்ளிட்ட வேறு பெயர்களும் உள்ளன. மகாபாரத்தில்

பாண்டவ மன்னர்கள் நாட்டையும் பாஞ்சாலியையும் பணயமாக்கிய விளையாட்டாக இவ்விளையாட்டு காணப்படுகிறது. இவ்விளையாட்டிற்குத் தாயக்கட்டைகள் தேவையான ஒன்றாக உள்ளன. தாயக்கட்டைகளை மரத்திலோ வெண்கலம் போன்ற உலோகத்திலோ செய்வர். இத்தாயக்கட்டைகள் நான்கு முகங்களைக் கொண்டிருக்கும். சிலவகைத் தாயக் கட்டைகள் ஆறு முகங்களைக் கூடக் கொண்டிருக்கும். சில பகுதிகளில் 7ஓ7 குறிப்பாக தாயக்கட்டை விளையாட்டில் புளியங்கொட்டைகளை உருட்டி விளையாடுவர். இத்தாய விளையாட்டு நெய்தல் நில மக்களால் விளையாடப்பட்டுள்ளது என்பதனை,

> **“முத்து உறழ் மணல்எக்கர் அளித்தக்கால் முன்ஆயம்**
> **பத்து உருவம் பெற்றவன் மனம்போல, நந்தியாள்**
> **அத்திறத்து நீ நீங்க, அணிவாடி, அவ்ஆயம்”**
> **(கலி.136:5-8)**

என்னும் பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது. முத்துப்போன்ற வெள்ளிய எக்கர் மணலில் முன்பு தலைவியைச் சந்தித்ததால் தாயவிளையாட்டில் பத்துத்தாயங்களைப் பெற்றவனுடைய மனம்போல மகிழ்ச்சியில் இருந்தாள். தலைவியைத் தலைவன் சந்திக்காத காலத்தில் பெருந்தாயம் இன்றிச் சிறுதாயம் பெற்றுத் தோற்றவனைப்போல அழகுகெட்டு, துயரத்தில் இருந்தாள் என்பதன் வழி நெய்தல் நில மக்களிடம் ‘தாயம்’ என்னும் விளையாட்டினை விளையாடும் வழக்கம் இருந்ததனையும் தாயம் என்பதற்கு ‘ஆயம்’ என்ற பெயர் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது.

**அலவன் ஆட்டம்**

மனிதர்கள் பிற உயிரினங்களுடன் விளையாடுவதை மகிழ்ச்சியாக எடுத்துக் கொள்வர். வீட்டில் செல்லபிராணிகளாக வளர்க்கப்படும் நாய், பூனை, கிளி, ஆடு, மாடு உள்ளிட்ட உயிரினங்களுடன் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதைப்போல நெய்தல் நில மக்கள் அந்நிலத்தில் அதிகம் காணப்படும் நண்டினை விரட்டிச் சென்று விளையாடியுள்ளனர். இதனையே அலவன் ஆட்டல் என்னும் பெயரால் அழைக்கின்றனர். செறிந்த மணல் பொருந்திய கடற்கரையில் நண்டை ஓட்டி விளையாடித் தளர்ந்து இளைபபாறியிருக்கிறார் தலைவி என்பதனை,

> **“திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி”**
> **(அகம்.280:3)**

என்னும் பாடலடியின் வழி அறியமுடிகின்றது. மேலும் நற்றிணை நெய்தல் திணைப்பாடலில் நண்டினை விரட்டி விளையாடிய தலைவியின் காற்சிலம்பு உடைந்துபோனது என்ற செய்தி பதிவாகியுள்ளது. இதனை,

> **“அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே”**
> **(நற்.363:10)**

என்ற பாடலடியின் வழி அறியமுடிகின்றது. இதன்வழி நெய்தல் நில மக்களின் விளையாட்டுகளில் முதன்மை இடத்தை அவலன் ஆட்டல் என்னும் விளையாட்டு பிடித்துள்ளதையும் இவ்விளையாட்டை பெரும்பாலும் பெண்கள் விளையாடியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

**சிற்றில் இழைத்தல்**

‘சிற்றில் இழைத்தல்’ என்பது குழந்தைகளின் விளையாட்டுகளில் ஒன்று ஆகும். குழந்தைகள் மண்ணில் விளையாடுவதை அதிகம் விரும்புவர். அவ்வாறு மண்ணில் விளையாடும் போது சிறிய வீடு போன்று கட்டி விளையாடுவர். மேலும் சோறு சமைப்பது போலவும் அதனை உண்டு மகிழ்வது போலவும் விளையாடுவர்.

“சோறாக்கி விளையாடுதல், அப்பா அம்மா விளையாட்டு, பொண்ணு மாப்பிள்ளை விளையாட்டென்று இடத்திற்குத் தகுந்தவாறு பலபெயர்களில் இவ்விளையாட்டு அழைக்கப்படுகிறது.”2

என்பர். பெற்றோர் தம் வாழ்க்கைமுறையினைக் கவனித்துக் கொண்டே இருந்து அவர்களைப் போல நடித்தல் என்பது இவ்விளையாட்டின் சிறப்பியல்பாகும். இப்படித்தான் விளையாடவேண்டும் என்ற விதிமுறை கிடையாது. குழந்தைகள் தங்கள் பெற்றோரின் வாழ்வியலை கவனித்ததன் அடிப்படையில் இவ்விளையாட்டு விளையாடப்படும்.

வாழ்க்கையிலுள்ள பாத்திரங்களை விளையாட்டிலும் புகுத்தி விளையாடுவர். அவற்றில் தந்தை, தாய், குழந்தை ஆகிய கதா பாத்திரங்கள் முக்கியமானவையாகும். வேலைக்குச் செல்வது, கடைக்குச் செல்வது உள்ளிட்ட பணிகளை தந்தை செய்வது போலவும், சமையல் செய்வது வீட்டைச் சுத்தம் செய்வது உள்ளிட்ட பணிகளை தாய் செய்வது போலவும் நடித்து விளையாடுவர். இவ்விளையாட்டில் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்படுவதும் உண்டு. இவ்வாறு குழந்தைகள் தங்களது தாய் போலவும் தந்தை போலவும் நடித்து சிறுவீடு கட்டி சோறு சமைத்து விளையாடும் விளையாட்டே சிற்றில் இழைத்தல் என்னும் விளையாட்டு ஆகும்.

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும் விதமாய் அகநானூற்று நெய்தல் திணைப் பாடலில் செவிலித்தாயிடம் தோழி கூறும் பொழுது நாங்கள் தோழியர் கூட்டத்தோடு ஒன்று சேர்ந்து கடலில் ஆனனோம், கடற்கரைச் சோலையில் சிற்றில் புனைந்தோம், சிறுசோறு ஆக்கிக் குவித்து விளையாடினோம் என்று கூறுகின்றாள். மேலும் தலைவன் அங்குவந்து சிறு சோற்றை விருந்துண்டு. சிற்றில்லில் தங்கிச் செல்லலாமா என்று வினவியதாகவும் குறிப்பிடுகின்றாள். இதனை,

**“தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்**
**சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்,**
**வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது**
**இருந்தனமாக”**

**(அக.110:6-9)**

**“தொல் இலைப் பரப்பின் விருந்து உண்டு**
**யானும்இக் கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று**
**எவனோ?”**

**(அக.110:12,13)**

என்னும் பாடலடிகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இதன்வழி சிற்றில் இழைத்தல் என்னும் சிறுவீடு கட்டி விளையாடும் விளையாட்டு நெய்தல் நில மக்களிடம் காணப்பட்டதனையும் இன்று குழந்தைகள் வினையாடும் விளையாட்டாக இருக்கும் இவ்விளையாட்டு சங்க காலத்தில் இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டாக இருந்தனையும் உணரமுடிகின்றது.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**சிற்றில் சிதைத்தல்**

மணலில் சிறிய வீட்டினைக் கட்டி விளையாடுதல் என்பது சிற்றில் இழைத்தல் என்பது போல பிறர் கட்டிய மணல் வீட்டினை அழித்து விளையாடுதல் சிற்றில் சிதைத்தல் ஆகும். ஒரு பொருளை உருவாக்குபவருக்கு அப்பொருளின் அருமை தெரியும். பிறர் உருவாக்கியப் பொருளை அழிப்பது எளிது. மனிதர்களில் சிலர் பிறரின் துன்பத்தில் இன்பம் காண்பர். அவ்வாறு பிறர் கட்டிய சிறிய மணல் வீட்டினைச் சிதைத்து மகிழ்வதும் விளையாட்டாகக் காணப்பட்டுள்ளது.

கடற்கரை மணலில் தலைவி கட்டிய சிறிய வீட்டினை சிதைத்துவிட்டுப் பின் ஆறுதல் கூறியுள்ளான் தலைவன் என்பதனை,

**“வரி ஆர் சிறுமனை சிதைஇ வந்து**

**பரிவுதரத் தொட்ட பணிமொழி நம்பி”**

**(நற்.378:9,10)**

என்ற பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது. இதன்வழி சிற்றில் சிதைத்தல் என்னும் விளையாட்டு தலைவிக்கு மனவருத்தத்தைத் தந்தாலும் அவ்விளையாட்டே தலைவன் தலைவி இடையே அன்பு மலர காரணமாய் இருந்துள்ளது என்பதனையும் அறியமுடிகின்றது. தலைவன் மட்டும் சிற்றில் சிதைக்கும் விளையாட்டில் ஈடுபடவில்லை. சிலநேரங்களில் கடல் அலையும் அவ்விளையாட்டினை விளையாடியுள்ளது. கடற்கரையில் கடல்அலை வரும் இடத்தில் பெயரினை எழுதி வைத்து கடல்அலை அப்பெயரினைத் தொடுகிறதா எனப் பார்த்து மகிழ்வது இன்றைய விளையாட்டுக்களில் ஒன்றாகும். சங்க காலத்தில் கடல் அலை வரும் இடத்தில் சிறிய வீட்டினைக் கட்டி விளையாண்டுள்ளனர். கடல் அலை அவ்வீட்டினைச் சிதைத்துள்ளது என்பதனை,

**“மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி**

**இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்”**

**(அக.90:1,2)**

என்னும் பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது. இதன்வழி தலைவி கட்டும் சிறிய வீட்டினை தலைவன் மட்டும் அல்லாமல் கடல் அலையும் சிதைத்துள்ளது என்பதனை அறியமுடிகின்றது.

**வண்டற் பாவை**

பாவை என்பது பொம்மை ஆகும். பெண் வடிவ பொம்மை என்பதால் பாவை என்னும் பெயர் பெற்றிருக்கலாம். மண்ணால் செய்யப்படும் பாவை வண்டற் பாவை ஆகும்.

“வண்டற் பாவை மண்ணாற் செய்யப்படும் பாவை என்று கூறலாம். மகளிர் வண்டற் பாவையைக் கடலருகில் செய்து விளையாடியதாக ஐங்குறுநூறு கூறுகின்றது. கடல் நீர் அதனைச் சிதைத்தலும் மகளிர் கண்கள் சிவப்ப அழுவர். மணலைக் கையால் வாரிக் கடலில் எறிவர்”3 என்பர். இதன்வழி மண்ணால் செய்த பாவைக்கு வண்டற் பாவை என்னும் பெயர் உள்ளாதனை அறியமுடிகின்றது.

தலைவி தன் தோழியரோடு முன்பு விளையாடியபோது செய்த வண்டல் பாவையைத் தான் பெற்றெடுக்காத குழந்தை போல் நினைத்து தலையில் வைத்துக் கொள்வாள் என்பதனை,

**“வண்டல் ஆயாமாடு பண்டுதான் ஆடிய**

**ஈனாப் பாவை தலையிட்டு ஓரும்”**

**(நற்.127:6,7)**

என்னும் பாடல் அடிகளின் வழி அறியமுடிகின்றது. அழகிய அணிகலன்களை

அணிந்த சிறுமியர் கடற்கரையில் வண்டல் பாவை செய்து விளையாடிய போது அவ்வண்டல் பாவையின் மார்பில் காணப்படும் ஒள்ளிய தேமல் போல என்னும் உவமையின் வழி தலைவி தனது உணர்வுகளைப் பாவைக்கு படைத்துப் பார்த்து விளையாண்டுள்ளார் என்பதனை,

**"வண்டற்பாவை வனமுலை முற்றத்து**

**ஒண்பொறச் சுணங்கின் ஐதுபடத்தாஅம்"**

**(நற்.191:3,4)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. கடற்கரை மணல் பரப்பில் வண்டல் பாவையை தூங்கச் செய்துவிட்ட தலைவனைக் காண வந்திருப்பதாக தோழி கூறுகிறாள். மேலும் மகளாகிய வண்டல் பாவையின் நெற்றியில் நாரைகள் மிதித்துச் செல்லும் ஆகையால் தலைவியை என்னுடன் அனுப்பிவை என்று தவைனிடம் தோழி கூறுவதை

**"நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி**

**நின்குறி வந்hனென்"**

**(குறு.114:1,2)**

**"ஆரல் அருந்த வயிற்ற**

**நாரை மிதிக்கும் என்மகள் நுதலே"**

**(குறு.114:4,50)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன்வழி நெய்தல் நில மகளிர் மண்ணால் செய்யப்பட்ட பாவையை வைத்து விளையாடியுள்ளனர் என்பதனையும் அப்பாவையைத் தன் குழந்தை போல பாவித்து பாதுகாக்கின்றனர் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**நீராடல்**

நிலத்தில் பலவகையான விளையாட்டுகளை ஆடிய மகளிர் நீரிலும் அச்சமின்றி விளையாடியுள்ளனர். அருவி நீராடல், சுனை நீராடல், கடல் நீராடல் எனப் பலவகை நீராடல் உள்ளன. நெய்தல் நிலத்தில் பெரும்பாலும் கடல்நீராடுதலே சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

"சங்க கால மகளிர் கடலிப் பாய்ந்து வரும் அலைகளை உதைத்து விளையாடுவர். ஒண்ணுதல் ஆயம் ஓவென்று மகிழ்ச்சியில் திளைப்ப, பெருங்கடலில் திரைவரும் பொழுது, தண்ணென்று பாய்ந்து ஊசலாடுவதைப் போன்று அலைக்கப்பட்டு விளையாடுவாள். கடல் முள்ளிப் பூ மாலை அணிந்த மகளிர் நுங்கின் நீரும் கரும்புச்சாறும் தெங்கனி இளநீருடன் கலந்து இம்மூன்று நீரையுண்டு கடலில் பாய்ந்து விளையாடுவர்"4என்பர்.

நெய்தல் நில மகளிர் கடலில் பாய்ந்து குதித்து நீராடியுள்ளனர் என்பதை,

**"ஓங்கற் புணரி பாய்ச்து ஆடு மகளிர்"**

**(நற்.395:6)**

என்னும் பாடலடியின் வழி அறியமுடிகின்றது. நெய்தல் நில மகளிர் தோழியருடன் கடல் அலையுடன் விளையாடியுள்ளனர் என்பதை,

**"திரை உழந்து அசைஇய நிரைவளை ஆயமொடு"** **(அக.190:1)**

என்னும் பாடலடி தெளிவுபடுத்துகின்றது. தலைவி தலைவனும் இணைந்து கடலில் நீராடினாள் என்பதை,

**"கடல் உடன் ஆடியும் கானல் அல்கியும்"**

**(குறு.294:1)**

என்னும் பாடலடி பறைசாற்றுகின்றது. இதன்வழி தலைவி தலைவனுடனும் தோழியருடனும் இணைந்து கடலில் நீராடியுள்ளாள்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

என்பதனையும் அலைகளோடு விளையாடி பொழுதுபோக்கியுள்ளனர் என்பதனையும் அறியமுடிகின்றது. நெய்தல் மலரும், மீன் இனங்களும் தலைவியின் கண்களைப் போல இருந்தன என்று உவமை கூறும் இடத்து ஆழமான குளத்தில் மூழ்கும் பெண்களின் கண்களைப் போல என்று கூறுகின்றனர். இதனை,

**"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**
**இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்**
**கயம் மூழ்கு மகளிர் கண்ணின்"**

**(குறு.9:4-6)**

என்னும் பாடலடிகள் உறுதி செய்கின்றன. இதன்வழி நெய்தல் நில மகளிர் ஆழமான குளத்தில் மூழ்கி நீராடியுள்ளனது என்பதனையும் சங்ககால மகளிரிடம் நீந்தி வினையாடும் வழக்கம் இருந்ததனையும் அறியமுடிகின்றது.

**ஓரையாடுதல்**

ஓரை என்பது பஞ்சு மற்றும் கோரைப் புல்லினைக் கொண்டு செய்யப்படும் பாவையாகும். வண்டற்பாவை போன்று கோரையைக் கொண்டு செய்யப்படும் பாவையை ஓரை என அழைக்கின்றனர். ஒளி பொருந்திய அணிகலன்களை உடைய தோழியர் கூட்டத்தோடு கூடி கோரைப் பாவையைச் செய்து விளையாடாமல் தலைவி தனித்திருந்தாள் என்பதை,

**"ஒள் இழை மகளிரொடு ஓரையும் ஆடாய்"**

**(நற்.155:1)**

என்ற பாடலடி புலப்படுத்துகின்றது. இதன்வழி நெய்தல் நில மகளிரிடம் ஓரையாடுதல் என்னும் விளையாட்டு இருந்ததை அறியமுடிகின்றது. கோரைப் புற்கள் ஆற்றங்கரையோரம் கிடைக்கக் கூடியவை ஆகம். எனவே இம்மக்கள் கடலும் ஆறும் ஒன்று சேரும் இடத்தில வசித்திருப்பர் என்பதனையும் அக்கோரைப் புற்களையும் பஞ்சினையும் கொண்டு பாவை செய்துள்ளனர் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**கானலாடல்**

கானல் என்பது கடற்கரைச் சோலையாகும். பூக்கள் நிறைந்த பகுதியை சோலை என்று கூறுவர். பூக்கள் அதிகம் உள்ள இடத்தில் பூவில் உள்ள தேனைப் பருகுவதற்காக வண்டுகள் வரும் அவ்வண்டுகளைத் தலைவியும் தோழியும் விரட்டி வி்யாடியுள்ளனர். கடற்கரைச சோலை வெண்மை நிறம் உடைய மணலால் நிறைந்து காணப்படும். அப்பகுதியைச் சுற்றி உப்பங்கழிகள் அமைந்திருக்கும். இத்தகைய கானல் பகுதியில் நெய்தல் நில மகளிர் விளையாடினர் என்பதை,

**"நீயும் யானும் நெருநல் பூவின்**
**நுண்தாது உறைக்கும் வண்டினம் ஓப்பி**
**ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்**
**கழிசூழ் கானல் ஆடியது அன்றி"**

**(நற்.27:1-4)**

என்னும் பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது. இதன்வழி கடங்கரைச் சோலையான கானல் பகுதிகளில் நெய்தல் நில மகளிர் வண்டுகளை விரட்டியும் மணல் மீது ஏறியும் விளையாடியுள்ளனர் என்பதனை உணரமுடிகிறது.

**எண்ணி விளையாடல்**

கண்ணில் கூட்டமாய்த் தென்படும் பொருட்களை எண்ணி விளையாடும் மரபு மக்களிடையே காணப்படுகின்றது. இரவில் நட்சத்திரங்களை எண்ணுதல், சாலையில் செல்லும் போது மரங்களை எண்ணுதல், நடந்து வரும் ஆடு, மாடுகளை எண்ணுதல் என்று கண்ணில்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

படுவனவற்றை எண்ணி விளையாடும் வழக்கம் உள்ளது.

“இளமகளிர் தொலைவில் தென்படக் கூடிய அளவில் பெரியனவற்றை எண்ணி விளையாடுவதைச் சங்க இலக்கியத்தில் காணலாம். பாரி மகளிர் மன்னனைப் போரெதிர்ந்து வந்த நேவ்தர் குதிரைகளை நெடுவரையிலேறி எண்ணி விளையாடினர். ஈத்திலை குப்பையேறி உமணர் உப்பு வண்டிகளை எண்ணி விளையாடினர். மகளிர் காட்டில் கூட்டமாக வரும் யானைகளின் பிடிகளை எண்ணி விளையாடுவர் மேலும் கடல்களில் வரும் திமில்களை எண்ணியும் உப்புக் குவியலின் மேலேறி நின்று கடலில் வரும் தோணிகளை எண்ணியும் விளையாடுவர்.” 5என்பர்.

மணல் மேடு இடிந்து சரிந்த கரையில் நின்று சங்குகளைக் கூட்டமாகத் தொடுத்தது போல குருகுகள் வரிசையாய் காணப்பட்டன. அக்குருகுகளை எண்ணி வி்ளாடி பகற்பொழுதை நெய்தல் நில மக்கள் கழித்துள்ளனர் என்பதை,

**“நிலவுக் குவித்தன்ன மோட்டு மணல் இடிகரை**
**கோடு துணர்ந்தன்ன குருகு ஒழுக்கு எண்ணி**
**எல்லை கழிப்பினம் ஆயின்”**

**(நற்.159:3-6)**

என்னும் பாடல் அடிகளின் வழி அறிய முடிகின்றது. இதன்வழி நெய்தல் நில மகளிர் கடற்கரையில் அமர்ந்து குருகுகளை எண்ணி விளையாடியுள்ளனர் என்பதனை உணரமுடிகின்றது.

**ஊசல் ஆடல்**

சிறுவர்கள் முதல் முதியவர்குள் வரை அனைவருக்கும் பிடித்தமான விளையாட்டு ஊஞ்சல் ஆடுதல் ஆகும். ஊஞ்சல் அல்லது ஊசல் என்பது பொழுதுபோக்கு விளையாட்டு. சங்க காலம் முதல் விளையாடப்படும் விளையாட்டு. இதற்கு தூளி, தூரி ஆகிய பெயர்களும் உள்ளன. சிறுவர்குள் விழுதுகளைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடுவர். மரக்கிளைகளில் கட்டப்பட்ட ஊஞ்சலில் அமர்ந்து சிறுவரும் சிறுமியரும் ஊஞ்சல் ஆடுவர். தாமே காலால் உந்தி ஆட்டிவிட்டுக் கொண்டும் பிறர் ஆட்டிவிட்டும் விளையாடுவர்.

“சங்க கால மகளிர் ஊசலாடுவதில் தனிப்பட்ட விருப்பம் உடையவர்களாய் இருந்தனர். அக்காலத்தில் மரக்கிளைகளில் விழுதுகளைப் பிடித்துக் கட்டி ஊசலாடுவர்.” 6என்பர். அவ்வகையில் ஊசல் ஆடுதல் என்னும் விளையாட்டு அனைவருக்கும் பிடித்தமான விளையாட்டாக இருப்பதை அறியமுடிகின்றது. ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளையில் தாழை விழுதுகளை கயிறுகளாக மாற்றி ஊஞ்சல் கட்டி விளையாடுவர் என்பதை,

**“ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங்கழித்**
**தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி”**

**(அக.201:5,6)**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

மீன் இனங்களுள் தன்னை எதிர்த்து யாரும் இல்லாத அளவிற்கு சினமுடைய மீனாகக் காணப்படுவது சுறாமீன் ஆகும். அச்சுறாமீனின் கொம்பினால் செய்த பலகையைக் கோர்தடது நெய்தல் பூவின் நெடிய நாரினால் கயிறு தொடுத்து ஊஞ்சலை அழகாகக் கட்டியுள்ளனர் என்பதை,

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**"இனமீன் இகல்மாற வென்ற சினமீன்**
**எறிசுறா வான் மரும்புக் கோத்து**
**நெய்தல் நெடு நார்ப் பிணித்து யாத்து"**

**(கலி.131:6-8)**

என்னும் பாடலடிகளின் வழி அறியமுடிகின்றது. இதன்வழி ஊசல் என்னும் விளையாட்டு அனைவருக்கும் பிடித்த விளையாட்டாக அமைந்திருப்பதையும், சுறாமீனின் கொம்பினை கொண்டு ஊஞ்சல் செய்துள்ளனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

**நிறைவாக**

நெய்தல் நில மக்கள் அஃறிணை உயிரினையும் தன் உடன் பிறந்ததாகக் கொள்ளும் உயரிய குணம் படைத்தவர்கள் என்பதனை அறியமுடிகின்றது. நெய்தல் நில மக்களிடம்' தாயம்' என்னும் விளையாட்டினை விளையாடும் வழக்கம் இருந்ததனையும் தாயம் என்பதற்கு' ஆயம்' என்ற பெயர் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ளதையும் அறியமுடிகின்றது. நெய்தல் நில மக்களின் விளையாட்டுகளில் முதன்மை இடத்தை அவலன் ஆட்டல் என்னும் விளையாட்டு பிடித்துள்ளதையும் இவ்விளையாட்டை பெரும்பாலும் பெண்கள் விளையாடியுள்ளனர் என்பதும் புலனாகின்றது. சிற்றில் இழைத்தல் என்னும் சிறுவீடு கட்டி விளையாடும் விளையாட்டு நெய்தல் நில மக்களிடம் காணப்பட்டதனையும் இன்று குழந்தைகள் வினையாடும் விளையாட்டாக இருக்கும் இவ்விளையாட்டு சங்க காலத்தில் இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டாக இருந்தனையும் உணரமுடிகின்றது. நெய்தல் நில மகளிர் மண்ணால் செய்யப்பட்ட பாவையை வைத்து விளையாடியுள்ளனர் என்பதனையும் அப்பாவையைத் தன் குழந்தை போல பாவித்து பாதுகாக்கின்றனர் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது. நீராடல், ஓரையாடுதல், கானலாடுதல், எண்ணி விளையாடுதல், ஊசல்ஆடுதல் ஆகிய விளையாட்டுக்களும் நெய்தல் திணையில் கட்டமைக்கப்பட்டிருந்தமை குறித்து அறியமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.பாலசுப்பிரமணியம், தமிழர் நாட்டு விளையாட்டுகள், ப.216
2. மேலது., ப.127
3. அன்னிதாமசு, சங்ககாலப் பெண்மை, ப.90
4. மேலது., ப.95
5. மேலது., ப.93
6. மேலது., ப.88

**துணைநூற் பட்டியல்**

**முதன்மைத் தரவுகள்**

1. செயபால், இரா. (உ.ஆ.), அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை – 600098, முதற்பதிப்பு – 2004.
2. நாகராசன், வி. (உ.ஆ.), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை – 600098, முதற்பதிப்பு – 2004.
3. பாலசுப்பிரமணியன், கு.வெ.(உ.ஆ.), நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை – 600098, முதற்பதிப்பு – 2004.
4. விசுவநாதன், அ. (உ.ஆ.), கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை – 600098, முதற்பதிப்பு – 2004.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**துணைமைத் தரவுகள்**

1. அன்னிதாமசு (ப.ஆ.), சங்க காலப் பெண்மை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608001, முதற்பதிப்பு – 2004.
2. பாலசுப்பிரமணியம், இரா. தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600113, மூன்றாம் பதிப்பு – 2008.